25.04.2016

## இன்றைய வேளாண் செய்திகள்

### கீழ்பவானி புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தம்

கீழ்பவானி புன்செய் பாசனத்துக்கு திறந்துவிடப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்கு உள்பட்ட ஒரு லட்சத்து 3,500 ஏக்கர் புன்செய் பாசன நிலங்களுக்கு கடந்த ஜனவரி 13-ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. வழக்கமாக புன்செய் பாசனத்துக்கு 66 நாள்களில் 6 சுற்றுகளுக்கு 12 டிஎம்சி தண்ணீர் திறக்கப்படும்.

ஆனால் போதிய நீர்இருப்பு இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு பவானிசாகர் அணையில் இருந்து 56 நாள்களில் 5 சுற்றுகளுக்கு 10.5 டிஎம்சி மட்டுமே தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு கீழ்பவானி முறைநீர் பாசன சங்கங்களின் கூட்டமைப்பும் ஒப்புதல் வழங்கி இருந்தது.

அதன்படி, இறுதிச் சுற்றுக்கு ஏப்ரல் 21-ஆம் தேதி வரையிலும் தண்ணீர் திறந்திருக்க வேண்டும். ஆனால், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்தில் போதிய மழைப்பொழிவு இல்லாத காரணத்தாலும், நீர் மின் அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாததாலும், அங்கிருந்து பாசனத்துக்கு தண்ணீர் பெற முடியாமல் போனதால் இந்த ஆண்டு

புன்செய் பாசனத்துக்கு 3 நாள்கள் பற்றாக்குறையான தண்ணீர் விநியோகத்துடன் நடப்பு புன்செய் பாசனகாலம் நிறைவு பெற்றது.

ஏப்ரல் 23-ஆம் தேதி காலை 8 மணி நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 31.02 அடியாகவும், அணைக்கு 195 கனஅடி மட்டுமே நீர்வரத்தும் உள்ளது. அணையில் இருந்து காலிங்கராயன், கொடிவேரி பாசனத்துக்கு 900 கனஅடி மட்டுமே தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.

பவானிசாகர் அணையில் 1.2 டிஎம்சி., மட்டுமே நீர்இருப்பு உள்ளதால் மழை பெய்து நீர் வந்தால் மட்டுமே பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு பொதுப் பணித் துறையினர் தெரிவித்தனர்.

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்கு உள்பட்ட ஒரு லட்சத்து 3,500 ஏக்கர் புன்செய் பாசன நிலங்களுக்கு கடந்த ஜனவரி 13-ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. வழக்கமாக புன்செய் பாசனத்துக்கு 66 நாள்களில் 6 சுற்றுகளுக்கு 12 டிஎம்சி தண்ணீர் திறக்கப்படும்.

ஆனால் போதிய நீர்இருப்பு இல்லாத காரணத்தால் இந்த ஆண்டு பவானிசாகர் அணையில் இருந்து 56 நாள்களில் 5 சுற்றுகளுக்கு 10.5 டிஎம்சி மட்டுமே தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு கீழ்பவானி முறைநீர் பாசன சங்கங்களின் கூட்டமைப்பும் ஒப்புதல் வழங்கி இருந்தது.

அதன்படி, இறுதிச் சுற்றுக்கு ஏப்ரல் 21-ஆம் தேதி வரையிலும் தண்ணீர் திறந்திருக்க வேண்டும். ஆனால், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்தில் போதிய மழைப்பொழிவு இல்லாத காரணத்தாலும், நீர் மின் அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லாததாலும், அங்கிருந்து பாசனத்துக்கு தண்ணீர் பெற முடியாமல் போனதால் இந்த ஆண்டு

புன்செய் பாசனத்துக்கு 3 நாள்கள் பற்றாக்குறையான தண்ணீர் விநியோகத்துடன் நடப்பு புன்செய் பாசனகாலம் நிறைவு பெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 3 லட்சத்து 27 ஆயிரத்து 20 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 2 லட்சத்து 81 ஆயிரத்து 506 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 45 ஆயிரத்து 514 கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் பங்கேற்றிருந்தாலும் தரமான தேயிலைத் தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர். இதனால் 60 சதவீத தேயிலை தூள் மட்டுமே விற்பனையானது.

மேலும், அனைத்து ரகத்திற்கும் கிலோ ரூ. 3 வரை விலை சரிந்து காணப்பட்டது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ. 50 முதல் ரூ. 55-க்கும், உயர் வகை ரூ. 65 முதல் ரூ. 70-க்கும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 50 முதல் ரூ. 57-க்கும், உயர் வகை ரூ. 69 முதல் ரூ. 79-க்கும் விற்பனையானது.

கடந்த சில வாரங்களாக தேயிலைத் தூள் விற்பனையும் அதன் விலையும் சரிந்து வருவதால் கூட்டுறவு ஆலையிலுள்ள உறுப்பினர்கள், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## குன்னூரில் பலாப்பழ சீசன் தொடக்கம்: யானைகள் வரத்து அதிகரிப்பு

குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையில் பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளதால் மலைப்பாதையில் யானைகளின் வரத்து அதிகமாக இருக்கும் என்று வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம் உள்ளிட்ட வனப்பகுதிகளில் வறட்சி நிலவுவதால் வன விலங்குகளுக்குப் போதிய உணவும், தண்ணீரும் இன்றி வனத்தைவிட்டு வெளியேறி வருகின்றன.

இந்நிலையில், குன்னூர் அருகே உள்ள ஆதிவாசி கிராமங்கள் மற்றும் பர்லியாறில் உள்ள தோட்டக்கலை துறைக்குச் சொந்தமான பழப் பண்ணையிலும் பலாப்பழ சீசன் தொடங்கி உள்ளதால் யானைகள் தொடர்ந்து அப்பகுதியில் முகாமிட்டுள்ளன.

இவை இங்குள்ள பலா மரங்களைச் சேதப்படுத்துவதுடன், மலைப்பாதை மற்றும் மலை ரயில் பாதைக்கு அவ்வப்போது வந்து செல்வதால் போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது. யானைகளைக் கண்காணித்து அடர்ந்த வனப் பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குன்னூர் வனச்சரகர் சிவா தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### சுட்டெரிக்கும் வெயிலால் வெள்ளரிக்காய் விற்பனை அமோகம்

தர்மபுரி : கோடையில் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தால், தர்மபுரியில் வெள்ளரிக்காய் விற்பனை சூடுபிடித்துள்ளது. தமிழகத்தில் அதிக அளவில் வெள்ளரிக்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, இருமத்தூர், கிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது.

அறுவடை துவங்கியதால் முள்ளங்கி வரத்து அதிகரிப்பு

அரூர் : அரூர் சுற்றுவட்டார பகுதிகளில் முள்ளங்கி அறுவடை துவங்கி உள்ளதால், விற்பனைக்கு முள்ளங்கி வரத்து அதிகரித்துள்ளது. கிழங்கு வகையை சேர்ந்த முள்ளங்கி வெள்ளை, சிவப்பு என இரு நிறங்களில் உள்ளது. இதில், வெள்ளை முள்ளங்கி சமையலுக்கு பயன்படுத்தப் படுகிறது. ஈரப்பதம் மிகுந்து கொழுப்பு, புரத சத்து, தாது உப்புகள், நார்ச்சத்து, இரும்பு, பாஸ்பரஸ், கால்சியம் விட்டமின் 'ஈ' ஆகிய சத்துகளும் கந்தக சத்தால் காரத்தன்மையும், ஒரு வித நெடியும் உள்ளது.

உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றி, உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் அரூர், கடத்தூர், கம்பைநல்லூர்,

மொரப்பூர், பொம்மிடி, காரிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில், 1500க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் முள்ளங்கி பயிரிட்டு உள்ளனர். 3 மாத பயிரான முள்ளங்கி பயிரிட, ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வரை செலவாகிறது. தற்போது, முள்ளங்கி அறுவடை சீசன் துவங்கியதால், மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்துள்ளது. மொத்த விலையில் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ. 850க்கும், சில்லறை விலையில் முள்ளங்கி ஒரு கிலோ ரூ. 10 க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், முள்ளங்கி உற்பத்தி செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

## பரமத்திவேலூர் பகுதியில் வாழைத்தார் விலை சரிவு

பரமத்தி வேலூர் : நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலூகா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளைவிக்கப்படும் வாழைத்தார்கள் தரமாக இருப்பதால், வியாபாரிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதியை சேர்ந்த வியாபாரிகள் இங்கு குவிந்து வாழைத்தார்களை வாங்கிச் செல்கின்றனர். கொள்முதல் செய்த வாழைத்தார்களை லாரிகளில் ஏற்றி கொண்டுச் செல்கின்றனர். நேற்று சந்தைக்கு கடந்த வாரத்தை விட அதிகளவில் வாழைத்தார் விற்பனைக்கு வந்தது.

இதனால் வாழைத்தார் விலையும் குறைந்தது. கடந்த வாரம் பூவன்தார் ரூ.400க்கும், ரஸ்தாலி தார் ரூ.500க்கும், கற்பூரவள்ளி ரூ.400க்கும், பச்சை நாடன் ரூ.500-க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.500க்கும் விற்றது. இந்த வாரத்தில் பூவன்தார் ரூ.300க்கும், ரஸ்தாலி ரூ.400க்கும், கற்பூரவள்ளி ரூ.350க்கும், பச்சை நாடன் ரூ.400க்கும், மொந்தன் வாழைக்காய் ரூ.400-க்கும் விற்றன. வாழைத்தார்களின் விலை சரிந்ததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கோடை பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்தால் அதிக மகசூல் விவசாயிகளுக்கு யோசனை**

சேதுபாவாசத்திரம் : நடப்பு கோடை பருவத்தில் இருமடங்கு மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி செய்யலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சேதுபாவாசத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சாந்தி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் நடப்பு கோடை பருவத்தில் பரவலாக நெல் சாகுபடி நடந்து வருகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் 2 மடங்கு உற்பத்தியு, 3 மடங்கு வருமானம் பெற வேண்டுமானால் சிறப்பு தொழில்நுட்பங்களை கையாள வேண்டும்.

அதாவது தரமான சான்றுபெற்ற உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களை பயன்படுத்த வேண்டும். எந்த ரக விதையானாலும் ஏக்கருக்கு 2 கிலோ மட்டுமே போதுமானது. 40 சதுர மீட்டர் பரப்பில் (1 சென்ட்) மேட்டுப்பாத்தி அமைத்து பாலித்தீன் விரிப்புகளை பரப்பி அதன்மீது விதைப்பு சட்டங்களை வைத்து மண் மற்றும் இயற்கை எருக்களை இட்டு விதைகளை விதைக்க வேண்டும். வயலை மிகவும் துல்லியமாக சமன் செய்ய வேண்டும். சதுர முறையில் நடவுசெய்ய மார்க்கர் கருவியால் அடையாளமிட வேண்டும். சரியாக 10- 14 நாள் வயதுடைய இரு இலை பருவமுடைய இளநாற்றுகளை நடவு செய்ய வேண்டும்.

ஒரு குத்துக்கு ஒரு நாற்று மட்டுமே வைத்து மேலாக நடவு செய்ய வேண்டும். 22.5 செ.மீ 22.5 செ.மீ இடைவெளி (முக்கால் அடி இடைவெளி) இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 10ம் நாள் முதல் கோனோவீடர் களையெடுக்கும் கருவி கொண்டு 10 நாள் இடைவெளியில் 3 அல்லது 4 முறை களையெடுக்க வேண்டும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவைக்கேற்ப தழைச்சத்தை மேலுரமாக பிரித்து இடவேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைபிடிக்கும்போது ஒரு ஏக்கரில் சராசரியாக 4000 கிலோ (ஒரு ஹெக்டேருக்கு 10,000 கிலோ) வரை மகசூல் பெற முடியும்.

**தூக்கமின்மையை போக்கும் கத்தரிக்காய்**




பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட கத்தரிக்காயில் வைட்டமின் ஏ, பி சத்துக்கள் உள்ளன. இதில் பொட்டாசியம் மிகுதியாக இருக்கிறது. இதயத்துக்கு பலம் கொடுக்கிறது. நார்ச்சத்து மிக்கது. இரும்புச்சத்து மிக்க கத்தரிக்காய் பெருங்குடலில் புற்றுவராமல் தடுக்கிறது. தூக்கமின்மையை போக்கும் மருந்தாக விளங்குகிறது. கத்தரிக்காயை துண்டுகளாக நறுக்கி வேகவைத்து பசையாக அரைத்து ஒரு ஸ்பூன் எடுக்கவும். இதனுடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்க்கவும்.

நன்றாக கலக்கி சாப்பிட்டு வர தூக்கம் நன்றாக வரும். உணவுக்காக பயன்படும் கத்தரிக்காய் மருந்தாகிறது. சளி, இருமலுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கத்தரிக்காய் பசை, மிளகு பொடி, சீரகப் பொடி, நெய். ஒரு பாத்திரத்தில் சிறிது நெய் விடவும். நெய் உருகியதும் ஒரு ஸ்பூன் கத்தரிக்காய் பசையை போட்டு வதக்கவும். சிறிது சீரகப் பொடி, மிளகுப் பொடி சேர்த்து வதக்கி தண்ணீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர சளி, இருமல் பிரச்னை சரியாகும்.

கத்தரிக்காயில் கந்தகசத்து மிகுதியாக இருப்பதால் உடலுக்கு உஷ்ணத்தை தரும். ஒவ்வாமை நோய்களை போக்கும். ஈரலுக்கு நல்ல

மருந்தாக விளங்குகிறது. மூச்சு முட்டுதல், வறட்டு இருமல் போன்றவற்றுக்கு கத்தரிக்காய் மருந்தாகிறது. கத்திரிக்காயில் பலவகை இருந்தாலும் நீல நிறம், நாட்டு கத்தரிக்காய் சமையலுக்கு நல்லது. விதையில்லாத, பிஞ்சு கத்தரிக்காயை பயன்படுத்தலாம்.கத்தரி வேர், இலைகளை பயன்படுத்தி சிறுநீர் கடுப்புக்கான மருந்து தயாரிக்கலாம்.

கத்தரி இலைகளில் உள்ள முட்களை நீக்கிவிட்டு சுத்தப்படுத்தி ஒருபிடி எடுக்கவும். இதனுடன் சீரகப் பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர சிறுநீர் பெருக்கியாகிறது. கைகால், வயிறு வீக்கம் சரியாகும். 50 முதல் 100 மில்லி வரை காலை, மாலை குடிக்கலாம்.மருந்துக்கு பிஞ்சு கத்தரிக்காய் நல்லது. இதன் இலைகள், வேர்கள் மருத்துவ குணங்கள் உடையது.

இதயத்துக்கு நல்லது. நுரையீரல், சிறுநீரக கோளாறுகளை போக்கும். சீரண உறுப்புகளுக்கு நல்லது. மலச்சிக்கலை போக்குகிறது. இலைகள் சிறுநீர் பெருக்கியாக விளங்குகிறது. தோல் வியாதி உள்ளவர்கள் கத்தரிக்காயை குறைவாக பயன்படுத்த வேண்டும். இவர்கள் பிஞ்சு கத்தரிக்காய் சாப்பிடுவது நல்லது.கத்தரி வேரை பயன்படுத்தி உடல் வலி, கைகால் வலிக்கான மருந்த தயாரிக்கலாம்.

வேரை சுத்தப்படுத்தி 10 கிராம் வரை எடுக்கவும். இதனுடன் சிறிது மிளகுப்பொடி சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர உடல் வலி குணமாகும். வாயு பெருக்கம், ஈரத்தினால் ஏற்படும் நோய்களை தடுக்கிறது. வாத நோய்களை சரிசெய்கிறது. கத்தரிக்காய் இதயத்தை பாதிக்கும் கொழுப்புசத்தை தடுக்கிறது. நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக்கலை போக்குகிறது. புற்றுநோய் வராமல் தடுக்கிறது.

மூலத்தை குணப்படுத்தும் மாசிக்காய்




புண்களை விரைவில் ஆற்றும் தன்மை கொண்டதும், மூலத்துக்கு மருந்தாக பயன்படுவதும், முகப்பருவை மறைய செய்வதும், ரத்த கசிவை போக்க கூடியதும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கூடியதுமானது மாசிக்காய். பல்வேறு நன்மைகளை கொண்ட மாசிக்காய் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். மாசிக்காய் கடினமாக இருக்கும் என்பதால், அதன் பொடியை வாங்கி பயன்படுத்தலாம். மாசிக்காயை பயன்படுத்தி முகப்பருக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: மாசிக்காய் பொடி, சாதிக்காய் பொடி, எலுமிச்சம் பழம்.சிறிதளவு மாசிக்காய் பொடியுடன் சிறிது சாதிக்காய் பொடி, சிறிது எலுமிச்சம் பழம் சாறு சேர்த்து நன்றாக கலக்கவும். இதை இரவு நேரத்தில் முகப்பருவின் மீது பூசவும். பின்னர், காலையில் முகம் கழுவினால் முகப்பரு மறையும். மாசிக்காய் ரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்டது. தசையை இறுகச் செய்வதுடன் நோய்களை தடுக்கிறது. புற்றுநோய், அல்சர் வராமல் பாதுகாக்கிறது.

மாசிக்காயில் வைட்டமின் ஏ, சி சத்துக்கள் மற்றும் இரும்பு சத்து, கால்சியம் சத்து, நார்ச்சத்து உள்ளது. ரத்த கசிவை போக்கிறது.

புண்களை விரைவில் ஆற்றக்கூடிய தன்மை பெற்றது. மாசிக்காயை பயன்படுத்தி புண்களை ஆற்றும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் மாசிக்காய் பொடியுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். ரத்தமூலம் இருப்பவர்கள், மாதவிலக்கு சமயத்தில் அதிக உதிரப்போக்கு உள்ளவர்கள் இதை எடுத்துக்கொள்ளலாம். வாய் புண் தொண்டை புண் குணமாகிறது.

மாசிக்காய் பொடியை பயன்படுத்தி மூலத்துக்கான வெளிபூச்சு மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: மாசிக்காய் பொடி, அகத்தி கீரை, விளக்கெண்ணெய். ஒரு பாத்திரத்தில் சிறிது விளக்கெண்ணெய் ஊற்றவும். இதில் அகத்தி கீரையை போட்டு வதக்கவும். கீரை பொறிந்ததும் மாசிக்காய் பொடியை சேர்க்கவும். இந்த தைலத்தை வடிக்கட்டி பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளலாம். இதை மேல்பூச்சாக ஆசனவாயில் பயன்படுத்தும்போது, மூலம் சரியாகும். மூலத்தை சுருக்கி இயற்கை நிலைக்கு கொண்டுவரும். வெள்ளைப்போக்கு பிரச்னைக்கான மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: மாசிக்காய் பொடி, பனங்கற்கண்டு, காய்ச்சிய பால். ஒரு ஸ்பூன் மாசிக்காய் பொடியுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டிய பின்னர் பால் சேர்க்கவும். இதை குடித்துவர வெள்ளைப்போக்கு பிரச்னை சரியாகும். மாசிக்காயில் உன்னதமான மருத்துவ குணங்கள் உள்ளன. இது, உள் மற்றும் வெளி மருந்தாக விளங்குகிறது. பூஞ்சை காளான்களை போக்குவதுடன், நுண் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. ‘மாயபலா’ என்ற வடமொழி பெயரை கொண்ட மாசிக்காய், வீட்டில் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய மருத்துவ பொருளாகும்.

# உடலுக்கு குளிர்ச்சி தரும் அருகம்புல்



தோல் நோய்களை குணப்படுத்த கூடியதும், கண் எரிச்சலை சரிசெய்யும் தன்மை கொண்டதும், வயிற்றுப்போக்கை நிறுத்தக் கூடியதும், புண்களை ஆற்றவல்லது அருகம்புல் .வயல்வெளி, புல்வெளியில் வளரக்கூடியது அருகம்புல். எளிதில் கிடைக்க கூடிய அருகம்புல்லில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. இதன் மீது நடப்பதால் உடலுக்கு புத்துணர்வு கிடைக்கிறது. நரம்பு நாளங்களை தூண்டக் கூடியது. ரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்டது. உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. அருகம்புல்லை பயன்படுத்தி தோல் நோய்களுக்கான மருந்து தயாரிக்கலாம்.

அருகம்புல்லை சிறு துண்டுகளாக வெட்டி பசையாக அரைத்து எடுக்கவும். இந்த பசையுடன் மஞ்சள் சேர்த்து நன்றாக கலக்கவும். இதை பூசுவதால் அரிப்பு, சொரி சிரங்கு, படர்தாமரை, வியர்குரு சரியாகிறது. தோல் நோய்களுக்கு மருந்தாகும் அருகம்புல், அக்கி கொப்புளங்கள், சொரியாசிஸ்சை குணப்படுத்துகிறது. அருகம்புல்லை கொண்டு கண்நோய்க்கான மருந்து தயாரிக்கலாம். அருகம்புல்லை துண்டுகளாக நறுக்கி நீரில் இரவு முழுவதும் ஊற வைக்கவும்.

காலையில் வடிகட்டி ஊறல் நீரை மட்டும் எடுக்கவும். இதனுடன் காய்ச்சிய பால் சேர்த்து காலை, மாலை குடித்துவர கண் எரிச்சல், அரிப்பு

போன்றவை சரியாகும். அருகம்புல்லில் நீர்விடாமல் சாறு எடுக்கவும். இதை 2 சொட்டு விடும்போது மூக்கில் இருந்து வரும் ரத்தம் நிற்கும். அருகம்புல் சாறு 100 மில்லி அளவுக்கு குடித்துவர மாதவிலக்கின்போது ஏற்படும் அதிக ரத்தப்போக்கு கட்டுக்குள் வரும். பல்வேறு நன்மைகளை கொண்ட அருகம்புல், ரத்தத்தை சுத்தப்படுத்தி தோல்நோய்கள் வராமல் தடுக்கிறது. கோடை வெயிலுக்கு அருகம்புல் சாறு குடிக்கும்போது உடல் குளிர்ச்சி அடையும்.

வெள்ளைப்போக்கு, வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். அருகம்புல் சாறு 50 மில்லி எடுக்கவும். இதனுடன் புளிப்பில்லாத கெட்டி தயிர் சேர்க்கவும். இதை காலை, மாலை குடித்துவர வயிற்றுபோக்கு, வெள்ளைப்போக்கு சரியாகும். அருகம்புல்லை பயன்படுத்தி உடல் சூட்டை தணிக்க கூடிய, குடலில் ஏற்படும் புண்களை ஆற்றக்கூடிய மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: அருகம்புல் சாறு, மிளகுப்பொடி, நெய். ஒரு பாத்திரத்தில் அரை ஸ்பூன் விட்டு சூடுபடுத்தவும்.

இதனுடன் அருகம்புல் சாறு சேர்க்கவும். பின்னர், நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதனுடன் சிறிது மிளகுப்பொடி சேர்க்கவும். லேசாக கொதித்தவுடன் இறக்கி விடவும். தேவைப்பட்டால் சிறிது உப்பு சேர்க்கவும். இது உடல் உஷ்ணத்தை குறைக்கும். வெட்டை நோய்க்கு மருந்தாகிறது. வயிற்று புண்களை ஆற்றும். சிறுநீர் பெருக்கியாக விளங்குகிறது. கைகால் வீக்கத்தை போக்குகிறது. மருந்துகளை அதிகளவில் எடுத்துக்கொள்வதாலும், வெளியில் அடிக்கடி சாப்பிடுவதாலும் ஏற்படும் புண்களை அருகம்புல் சாறு ஆறும். எளிதில் நமக்கு கிடைக்க கூடிய அரும்கபுல் நோயற்ற வாழ்வுக்கு சிறந்தது.

**உடல் துர்நாற்றத்தை போக்கும் எலுமிச்சை, வெட்டிவேர்**




ஆண்டுக்கு மூன்று மாதம் வெயில் கொளுத்தும். தற்போது வெயில் காலம் தொடங்கியுள்ள நிலையில் தலை சூடு, உடல் உஷ்ணமாவது, வியர்குரு போன்றவை ஏற்படுகிறது. வெயிலில் நடப்பதால் களைப்பு ஏற்படுகிறது. வெயிலின் தாக்கத்தினால் வியர்வை அதிகமாக வெளியேறுகிறது. உப்புசத்து வெளியாவதால் உடலில் கற்றாழை நாற்றம் அடிக்கிறது. எனவே, உடலை சுத்தமாக வைத்திருப்பது அவசியம். வெயிலில் இருந்து உடலை பாதுகாக்கும் குளியல் முறைகள் குறித்து பார்ப்போம்.

தண்ணீரில் எலுமிச்சை சாறை கலந்து குளித்தால், வியர்வை நாற்றம் இல்லாமல் இருக்கும். உடலில் இருந்து வியர்வை வெளியாவது குறைகிறது. உடலும் குளிர்ச்சி அடைகிறது.வெட்டி வேரை குளிக்கும் தண்ணீரில் 2 மணி நேரம் ஊறவைத்து பின்னர் குளித்தால் வியர்வையால் ஏற்படும் துர்நாற்றம் இருக்காது.

உடல் உஷ்ணம் தணியும். நறுமணத்தை தரக்கூடியதாகிறது. சருமத்தை பாதுகாக்கும் குளியல் தைலம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: அருகம்புல், மஞ்சள், நல்லெண்ணெய். ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு நல்லெண்ணெய் ஊற்றவும். இதனுடன் அருகம்புல் சாறு, மஞ்சள் சேர்ந்த கலவையை சேர்க்கவும். இதை தைலப்பதத்தில் காய்ச்சி ஆற

வைத்து வடிகட்டி எடுக்கவும். இந்த தைலத்தை வாரம் ஒரு முறையாவது உபயோகிக்கலாம்.

குளியலுக்கு முன்பு இதை பயன்படுத்துவதால் வெயிலில் செல்லும்போது தோல் பாதிக்காது. பொடுகு பிரச்னை சரியாகும். தலைமுடி கொட்டுவது நிற்கும். மூளைக்கு குளிர்ச்சி தரும். சனி நீராடுவது நன்மை தரும். வாரம்தோறும் தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது. வெயில் காலத்தை சமாளிக்கும் குளியல் பவுடர் தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: பச்சரிசி, கடலை பருப்பு, பச்சை பயிறு, வெட்டி வேர், எலுமிச்சம் பழத்தோல், அருகம்புல், கஸ்தூரி மஞ்சள், துளசி அல்லது வேப்பில்லை.எலுமிச்சம் பழம், அருகம்புல், துளசி ஆகியவற்றை வெயிலில் காயவைத்து எடுக்கவும். இதனுடன் மேற்கண்ட பொருட்களை சேர்த்து பொடி செய்து எடுக்கவும். இந்த பொடியை வெயில் காலத்தில் சோப்புக்கு பதிலாக பயன்படுத்தலாம். இதை தேய்த்து குளித்து வர உடல் தூய்மையாவதுடன் குளிர்ச்சியாகவும் இருக்கும்.

வேர்குரு இல்லாமல் போகிறது. இந்த பொடியை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்தலாம். அம்மை, வியர்குரு போன்றவற்றை வராமல் உடலை பாதுகாக்கலாம். கோடை காலத்தில் வியர்வை நாற்றம், உடல் உஷ்ணத்தை போக்குவதும், தோல், தலைமுடி ஆரோக்கியமாக இருக்க மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றினால் உடல் ஆரோக்கியம் அடையும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு விலை உயர்வு**



பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கின் விலை உயர்ந்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>மரவள்ளி கிழங்கு</u>

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரமத்தி, கபிலர்மலை, அண்ணாநகர், வாழவந்தி, பெருங்குறிச்சி, சோழசிராமணி, திடுமல், பாகம்பாளையம், சின்னமருதூர், கூடச்சேரி, காசப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளி கிழங்கு பயிர் செய்து உள்ளனர்.

இந்த பகுதியில் விளையும் மரவள்ளி கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, செல்லப்பம்பட்டி, ஆத்தூர், மலைவேப்பங்குட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிப்ஸ் தயார் செய்பவர்களுக்கும், சேகோ தொழில் சாலைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>விலை உயர்வு</u>

மேலும் மரவள்ளி கிழங்கு அதில் உள்ள டார்ச் மற்றும் பாயிண்ட் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் 1 டன் மரவள்ளி கிழங்கு ரூ.4,000 வரை விற்பனையானது. இந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன் ஒன்று ரூ.4 ஆயிரத்து 500–க்கு விற்பனை ஆனது. வரத்து குறைவின் காரணமாக மரவள்ளி கிழங்கின் விலை உயர்ந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையில் கடந்த வாரத்தை விட இந்த வாரம் மரவள்ளி கிழங்கின் விலை உயர்வு அடைந்து உள்ளதால் மரவள்ளி பயிரிட்டு இக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## தண்ணீர் திறப்பு எதிரொலி: வைகை அணை நீர்மட்டம் 32 அடியாக குறைந்தது



ஆண்டிப்பட்டி

தண்ணீர் திறப்பு எதிரொலியாக வைகை அணையின் நீர்மட்டம் 32 அடியாக குறைந்தது. இதனால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

<u>தண்ணீர் திறப்பு</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணை உள்ளது. இந்த அணையில் இருந்து தேனி, திண்டுக்கல். மதுரை மாவட்ட மக்களின் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. தற்போது மதுரையில் நடைபெற்ற சித்திரை திருவிழாவிற்காக அணையில் இருந்து கடந்த 19–ந் தேதி வினாடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

கடந்த 3 நாட்களில் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு நேற்று பகல் 12 மணிக்கு தண்னீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

<u>குடிநீர் தட்டுப்பாடு அபாயம்</u>

கடந்த 19–ந்தேதி வைகை அணையின் நீர்மட்டம் 35.83 அடியாக இருந்தது. கடந்த 3 நாட்களில் அணையின் நீர்மட்டம் 4 அடி வரை சரிந்து நேற்று காலை 31.89 அடியாக குறைந்தது. வைகை அணையில் 15 அடி வரையில் வண்டல் மண் அதிகமாக படிந்து இருப்பதால், அணையின் தண்ணீர் இருப்பு மிக குறைந்த அளவே உள்ளது. இதன்காரணமாக வைகை அணையை மட்டுமே குடிநீர் ஆதாரமாக கொண்டுள்ள மதுரை, சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்ட கிராமங்களில் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கி, முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்தால் மட்டுமே வைகை அணைக்கு நீர்வரத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அதுவரையில் வைகை அணையின் தண்ணீரை சிக்கனமாக குடிநீர் தேவைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

<u>நீர்இருப்பு</u>

நேற்றுக்காலை 6 மணி நிலவரப்படி வைகை அணையின் நீர்மட்டம் 31.89 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 63 கனஅடி தண்ணீர் வந்த நிலையில், சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும்

மதுரை மாநகர மக்களின் குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 450 மில்லியன் கனஅடியாக இருந்தது.

## ஊத்துக்கோட்டையில் சூறாவளி காற்றுடன் மழை



ஊத்துக்கோட்டை,

ஊத்துக்கோட்டை மற்றும் அதன் சுற்றுப்புற ஊர்களான புதுகுப்பம், நரசாரெட்டிகண்டிகை, ஆம்பாக்கம், பேரடம். சுப்பாநாயுடுகண்டிகை, காரணி, வெள்ளாத்துகோட்டை போன்ற பகுதிகளில் நேற்று மாலை சூறாவளி காற்றுடன் திடீரென மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மரக்கிளைகள் முறிந்தன. மரத்தில் காய்த்து தொங்கிய மாம்பிஞ்சுகள் உதிர்ந்தன.

**சாத்தனூர் அணையில் தண்ணீர் திறப்பு: மூங்கில்துறைப்பட்டு பகுதியில் 10 ஏரிகள் நிரம்பின**



மூங்கில்துறைப்பட்டு,

சாத்தூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால், மூங்கில்துறைப்பட்டு பகுதியில் 10 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன.

<u>சாத்தனூர் அணை திறப்பு</u>

திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் அணை உள்ளது. இந்த அணையின் மூலம் திருவண்ணாமலை மாவட்டம் மட்டுமின்றி, விழுப்புரம் மாவட்ட பகுதி விவசாய நிலங்களும் பாசன வசதி பெற்று வருகிறது. கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த வடகிழக்கு பருவமழை காரணமாக சாத்தனூர் அணை நிரம்பியது. இந்த நிலையில் பாசனத்துக்காக அணையை திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடந்த பிப்ரவரி மாதம் 12–ந்தேதி சாத்தனூர் அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீரை திறந்து விட்டனர். அந்த தண்ணீர் 2 நாட்கள் கழித்து திருவண்ணாமலை மாவட்டத்தை கடந்து, விழுப்புரம் மாவட்ட எல்லையான

மூங்கில்துறைப்பட்டு அருகே இளையாங்கன்னி கிராமத்துக்கு வந்தது. பின்னர் அங்கிருந்து பிரதான வாய்க்கால்கள் வழியாக மூங்கில்துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் சென்று கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக 10–க்கும் மேற்பட்ட ஏரிகள் தற்போது நிரம்பி வழிகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:–

சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், தற்போது மூங்கில்துறைப்பட்டு, கருவனூர், சவேரியார்பாளையம், பொரசப்பட்டு, பெரிய கொள்ளியூர், குளத்தூர் உள்பட 10–க்கும் மேற்பட்ட ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. மேலும் பல ஏரிகள் நிரம்பி வருகிறது. இதனால் என்னை போன்ற விவசாயிகள் பலரும் மிகுந்த ஆர்வத்துடன் நெல், கரும்பு, மரவள்ளி கிழங்கு ஆகியவைகளை சாகுபடி செய்து பராமரித்து வருகிறோம். சாத்தனூர் அணையில் தற்போது நீர் மட்டம் குறைந்து வருவதால், நீர் திறப்பு விரைவில் நிறுத்தபடும் என தெரிகிறது.

<u>வீணாகி வரும் தண்ணீர்</u>

சாத்தனூர் அணையை திறப்பதற்கு முன்பே, மூங்கில்துறைப்பட்டு பகுதியில் உள்ள வாய்க்கால்களை தூர்வார விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் காரணமாக சாத்தனூர் அணை தண்ணீர் முறையாக ஏரிகளுக்கு செல்லாமல், அவை ஆங்காங்கே வாய்க்காலில் இருந்து வெளியேறி தரிசு நிலங்கள் மற்றும் சாலைகளில் புகுந்து அதிக அளவில் வீணாகி வருகிறது. வாய்க்கால்களை முன்னதாகவே தூர்வாரியிருந்தால் மேலும் 20–க்கும் மேற்பட்ட ஏரிகள் தற்போது நிரம்பி இருக்கும். அதன் மூலம் ஏராளமான விவசாயிகள் பெரும் பயனடைந்து இருப்பார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.